**இரத்தினபுரி பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 30 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 03 வேலைகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,094,758 ஆன கடன்கொடுனர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | உரிய சீராக்கத்தினை மேற்கொண்டு கணக்குகளை சரிசெய்ய வேண்டும். | 2019 ஆண்டு கணக்குகளை தயார்க்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கிலீமளே நீர் உத்தேச திட்டத்திற்காக கிடைக்க வேண்டிய் ரூபா 1,995,000 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய சீராக்கத்தினை மேற்கொண்டு கணக்குகளை சரிசெய்ய வேண்டும். | 2019 ஆண்டு கணக்குகளை தயார்க்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 36,600 பெறுமதியான அச்சுப்பொறி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக் கொள்வனவு மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டு கணக்குகளை தயார்க்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் 02 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணைப்பதிவேட்டு மீதிகளிடையில் ரூபா 6,035,322 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து கணக்கினை நாலாவதுவரையாக்க வேண்டும். | இப் பதிவேடுகள் இரண்டினதும் மீதிகள் நீண்ட காலமாக வித்தியாசப்படும் மீதிகளாகும். எதிர்காலத்தில் முனைய ஆண்டுகளின் வித்தியாசங்களை கண்டறிந்து நாலாவதுவரையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)இ | 2005 முதல் 2016 ஆண்டு வரை 16 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 463,245 ஆன உப கட்டுநிதியை தீர்த்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | இம் முற்பணம் தொடர்பாக கண்டறிந்து உரிய நபர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,913,203 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,676,436 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 1,191,240 | 1,329,515 | 1,316,043 | 69,496 | 157,840 | 837,043 | 847,136 | 60,457 |
| (ii) | வாடகை | 481,400 | 46,800 | 46,800 | - | 455,000 | 96,678 | 96,678 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 706,650 | 634,600 | 634,600 | - | 690,200 | 1,007,875 | 1,007,875 | 182,780 |
| (iv) | ஏனைய வருமானம் | 19,598,000 | 21,630,338 | 37,833,060 | 18,391,992 | 27,347,500 | 17,151,122 | 10,737,057 | 30,969,407 |

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 16 திகதியளவில் 368 வியாபார நிறுவனங்கள் கட்டணம் செலுத்திருந்தி வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்திருந்தன. அதற்கு தேவையான சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பரிந்துரையை பெற்றுக் கொள்ள 148 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன், பரிந்துரை தாமதமானதன் காரணமாக 21 வியாபார அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. | அனைத்து வியாபார நிறுவனங்களுக்கும் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தினால் வழங்க வேண்டிய பரிந்துரை தாமதிப்பதன் காரணமாக சபையினால் விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் அளவு குறைந்துள்ளது. இது தொடர்பாக உரிய அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதுடன், 2019 சனவரி 01 திகதி முதல் கிடைக்கும் வியாபார அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் தற்போது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ)(i) | 1988 இல் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இல் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ளாத வியாபாரங்கள்/கைதொழில்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், அவ்வாறான நிறுவனங்களை இனங்காணுவதற்கு வருடாந்த ஆய்வொன்று அல்லது வேறு முறையான அமைப்பொன்றை பின்பற்றி இருக்கவில்லை. | சுற்றாடல அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவி வெற்றிடமாகுதல் மற்றும் விடய பொருப்பு அலுவலர்கள் பிரசவ விடுமுறை பெற்றிருந்ததனால் 2018 ஆண்டிற்கான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்நதது. |
| (ii) | சபைக்கு கிடைக்கும் விண்ணபங்களில் 05 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் மீளாய்வாண்டினுள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட சுற்றாடல அனுமதிப்பத்திர வருமானத்தின் 90 சதவீதத்தை அறவிடுவதற்கு சபைக்கு இயலாமலிருந்தது. அதிகார எல்லையினுள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய வியாபார/கைத்தொழில்கள் இருக்கும் போதும் அது தொடர்பாக நடவடிக்கை | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சகல நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளதால் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதிபத்திர விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

எடுக்காததனால் சபை அதிகார எல்லையினுள் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சபையின் பொறுப்பு போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் உள்ள 23 தொலை தொடர்பு கோபுரஙகளிலிருந்து மற்றும் 17 சிரிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வருடாந்தம் அறவிட வேண்டிய வியாபார வரி அறவிடப் படாததனால் ஆண்டொன்றிற்கு ரூபா 120,000 ஆன வருமானமொன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | துணைச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை அதிகார எல்லையினுள் தொலை தொடர்பு கோபுரங்கள் மற்றும் சிரிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கட்டணம் அறவிடுதல் தொடர்பாக துணைச் சட்டங்களினூடாக தேவையான சட்டப் பின்னனியினை தயாரித்துக்கொள்ள வேண்டியதனால் இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமை தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் 03 நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல், நவநகர பிரதான அலுவலக வளவில் உக்கலடையும் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து இயற்கை பசளை உற்பத்தி மற்றும் அபபசளையை பயன்படுத்தி மலர் மற்றும் மரக்கறி விவசாயம் செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதும் அச் செயற்பாடுகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் மேற் கொள்ள சபையினால் இயலாமலிருந்தது. | முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டும். | 2018 ஏப்ரல் மாதமளவில் புதிய சபையொன்று நியமிக்கப்பட்டதனால் சபை தீர்மானத்தின் பிரகாரம் செயற்படும் போது நிதி நிலைமை சீராக இல்லாததனால் இச் செயற்பாடுகளை மேற்கொள்ள இயலாமலிருந்தது. |

(ஆ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 நிகழ்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 ஆண்டு இறுதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் சரியாக இனங்கண்டு நீண்டகால திட்டங்களை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை நியமிக்கப்பட்ட உடன் ஆரம்பிக்கப்பட்ட ‘‘இதுவே ஆரம்பம்’’ நடமாடும் நகழ்சித் திட்டத்தின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நோக்கங்கள் பிரகாரம் பல நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. |

**3.2 மனித வள முகாமை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி அளவில் அங்கீகரிக்கப்பட்ட 07 பதவிகளில் 09 வெற்றிடங்கள் நிலவின. | பதவி வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் வெற்றிடங்களை நிரப்ப உள்ளுராட்சி உதவி ஆணையாளர் மற்றும் பிரதான செயலாளரிற்கு ஆண்டொன்றிற்கு 04 காலாண்டு அறிக்கைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பதவிகளின் தேவைகளை உருதிப்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை திருத்தியமைக்க அல்லது ஒப்பந்தக் காலப்பகுதி இறுதியில் சேவையை முடிவுருத்த ஏனும் நடவடிக்கை மேற்கொள்ளாது உட்படுத்தப்பட்டிருந்த சேவை ஒப்பந்தத்தை புதிப்பித்து 11 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். அவ் ஊழியர்கள் சார்பாக மீளாய்வாண்டினுள் சபை நிதியத்தினால் ரூபா 2,018,930 சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சேவை ஒப்பந்தத்தின் மீது நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பதவிகளிற்காக நிதிப் பிரமாணம் 71 கீழ் புதிய பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு இதற்கு பல ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அப்பதவிகள் தொடர்பாக எவ்வித அறிவித்தலும் வழங்கப்படவில்லை. |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையில் காணப்படும் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற அல்லது ஒழுங்கமைப்பது தொடர்பாக முறையான முறைமையொன்றை பின்பற்றி இருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காணல் மற்றும் முன் நடவடிக்கைகள் தொடர்பாக முறையான நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக கிடைத்த பொது மக்கள் முறைப்பாடுகள் பிரகாரம் தொழில் நுட்ப அலுவலர் ஊடாக வழங்கப்படும் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு அகற்ற அல்லது முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2014 ஜுன் 30 திகதியளவில் முன்னேற்றமடைந்த 06 பிரதேசங்களை இனங்கண்டிருந்த போதும், அது தொடர்பான வர்தமாணி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருக்காததனால், மீளாய்வாண்டு இறுதி வரையும் அப் பிரதேசங்களிலிருந்து வீத வரி அறவிட முடியாமை, சபைக்கு கிடைக்கும் பிரதான வருமான மூலமொன்று இழக்கப்படுவதற்கு காரணமாக இருந்தது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். | சபை அதிகார எல்லைனுள் வீத வரி அறவிடல் தொடர்பாக முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக பெயரிட தேவையான அங்கீகாரம் உள்ளுராட்சி உதவி ஆணையாளர் தற்போது அங்கீகாரம் வழங்யுல்லதனால் அப் பிரதேசங்கள் வர்த்தமானயில் பிரசுரிப்பதற்காக தேவையான முன் ஏற்பாடுகளை எதிர்வரும் மாதத்தில் சபை தீர்மானங்கள் பிரகாரம் செய்கிறேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் வீதி விளக்கு பதிவேடு நாளாதுவரையாக்கப்பட்டு பராமரித்திருக்கவில்லை. | பதிவேடு நாளாதுவரையாக்கப்பட்டு நடாத்தப்பட வேண்டும். | வீதி விளக்கு பதிவேட்டை காலாவதுவரையாக நடாத்த விடய பொருப்பு அலுவலர் அறிவூட்டப்பட்டதுடன், பின் தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான JCB இயந்திரம் 2016 ஆண்டின் போது செயலிலந்துள்ளதுடன், அவ் இயந்திரத்தின் உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் 2016 மே 04 திகதிய ரூபா 1,721,277 ஆன பழுதுபார்தல் மதிப்பீடொன்றை வழங்கியிருந்தது. எனினும் அவ்வாண்டில் இயந்திரம் பழுதுபார்கப்பட்டிருக்காததுடன், 2017 ஜுன் மாதமலவில் மதிப்பீட்டு பழுதுபார்தல் செலவு ரூபா 711,389 இனால் அதிகரித்திருந்தது. | பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் வேலைகளை முறையாக தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் நிதி நிலைமை சீராக இல்லாததனால் சபைக்கு சொந்தமான JCB இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக பெரும் தொகை பணத்தை ஒதுக்குவது கடினமானது. கூடிய விரைவில் குறித்த இயந்திரத்தை பழுதுபார்த்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | தொழில்நுட்ப பழுதுபார்த்தலிற்காக 2018 மார்ச் மாதம் முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட போதும், அதனை பழுதுபார்க்கும் தேதவைப்பாடு இல்லை என தவிசாளரினால் 2018 ஏப்ரல் மாதம் குறித்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இயந்திரத்தை 2018 திசெம்பர் 12 வரை அந் நிறுவனத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், பரிசோதனை மற்றும் போக்கு வரத்து கட்டணமாக ரூபா 42,550 ஆன விளைவற்ற செலவொன்றை மேற்கொள்ள சபைக்கு நேர்ந்துள்ளது. | பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் வேலைகளை முறையாக தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் நிதி நிலைமை சீராக இல்லாததனால் சபைக்கு சொந்தமான JCB இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக பெரும் தொகை பணத்தை ஒதுக்குவது கடினமானது. கூடிய விரைவில் குறித்த இயந்திரத்தை பழுதுபார்த்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2016 சனவரி முதல் மார்ச் 10 வரையான காலத்தினுள் இவ் இயந்திரத்தை வாடகைக்கு விட்டு சபை ரூபா 308,750 வருமானத்தை துரிதமாக பழுதுபார்க்காததனால் சபைக்கு வருமான மூலமொன்று இல்லாமல் போயிருந்ததுடன், பழுதுபார்த்தல் செலவு மேலும் அதிகரிக்கும் அபாயம் நிலவியது. | பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் வேலைகளை முறையாக தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் நிதி நிலைமை சீராக இல்லாததனால் சபைக்கு சொந்தமான JCB இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக பெரும் தொகை பணத்தை ஒதுக்குவது கடினமானது. கூடிய விரைவில் குறித்த இயந்திரத்தை பழுதுபார்த்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வருடங்களுக்கு அதிக காலத்திளிலிருந்து ஓட்ட நிலையில் நிலவாத 05 வாகனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பழுதுபார்க்க அல்லது பராதீனம் செய்ய வேண்டும். | குறித்த வாகனங்கள் பராதீனம் செய்யவதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்கிறேன். |

**3.5 பெறுகைகள்**

3.5.1 **பெறுகைகள் திட்டம்**

3.5.2 **வழங்கல் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 4,094,280 பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | அவசர தேவையின் நிமித்தம் கொள்வனவு செய்ய வேண்டி ஏறபடுவதனால் சபையின் அனைத்து கொள்வனவுகளும் விலை குழுவின் பரிந்துரையின் படி சபை அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. சபை நிதியத்தை கருத்திற்கொண்டு தேவையான பொருட்களை தேவைக்கேட்ப பெற்றுக்கொள்வதனால் பெறுகைகள் திட்டமொன்றை தயாரிப்பது கடினமாகும். ஏதிர்காலத்தில் இந் நிலையினை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதியப்படாத வழங்குனர்களிடமிருந்து விலை மனு கோரப்பட்டு ரூபா 765,620 செலவில் வீதி விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் இப் பெறுகை தொடர்பாக தொழில்னுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமித்தல் மற்றும் பொருட்களை பெற்றுக்கொள்ளல் விநியோகித்தல் பொருட்பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை நியமிக்கப்பட்டதுடன் ஆரம்பிக்கப்பட்ட அனைக்கு அதிகார எல்லையையும் உட்படுத்தியதாக நடாத்தப்பட்ட நடமாடும் சேவை நிகழ்சி திட்டத்தில் அவ் அதிகார எல்லையில் வீதி விளக்கு பொருத்துதல் முக்கிய வேலையொன்றானது. இவ் வேலைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்திலிருந்து கொள்ளனவு செய்யப்பட்டது. பொருட்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தல் பொருட்பதிவேட்டில் பதிவிடல் தொடர்பாக காணப்பட்ட குறைபாடுகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 25 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 1,693,000 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்கி, ஓதுக்கிய ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | இந்த செலவின விடயங்களில் செலவு சந்தர்ப்பங்கள் ஏற்படாமையினால் சில செலவின தலைப்புகளில் ஒதுக்கீடு மீதியானது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 18 செலவின விடயங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 91,063,000 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சளவில் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்கி, ஓதுக்கிய ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | இந்த செலவின விடயங்களில் செலவு சந்தர்ப்பங்கள் ஏற்படாமையினால் சில செலவின தலைப்புகளில் ஒதுக்கீடு மீதியானது. |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்காக உள்ளக கணக்காய்வொண்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வொண்று மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கப்பட்டுள்ளதால் கணக்காய்விற்காக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டின் முதற் காலாணடிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை 2019 ஏப்ரில் 10 ஆம் திகதி நடாத்தப்பட்டது. |